R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2018-2020
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2018-2020
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month 2019 at Batlagundu Post office.
June 2019

எமது புதிய வெளியீடு
Vol.4
இப்புத்தகத்தை பெற்றுக்கொள்ள

**அர்ப்பணம்...**

காற்றில் கலந்த தேவ செய்திகளை புத்தகமாக வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம். இப்புத்தகத்திற்கு ஓய்வு வேண்டாம். நீங்கள் படித்து முடித்தவுடன் உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கும் கொடுத்து உதவிடுங்கள். கிறிஸ்துவின் சுவிசேஷ ஊழியம் எல்லோருக்கும் சென்றடைய அது உதவியாக இருக்கும்.

மேலும் நீங்கள் கூடிவருகிற சபையில் ஒவ்வொரு வாரமும் நடைபெறும் வேதபாட வகுப்புகளில் 15 நிமிடங்கள் ஒதுக்கி இப்புத்தகத்தில் உள்ள ஒரு செய்தியை வாசித்து தியானம் செய்யுங்கள். அப்படிச்செய்யும்போது நீங்கள் ஒரு வருடத்தில் 52 செய்திகளையும் வாசித்து தியானம் செய்ய முடியும்.

கர்த்தருடைய செய்திகளை நாம் கேட்கும்போது காலமெல்லாம் சந்தோஷத்தையும், சமாதானத்தையும் பெற்று அநுபவிக்கும் பாக்கியத்தைப் பெறுவோம்.

வேதம் சொல்கிறது: "இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும் கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது" வெளிப்படுத்தல் 1:3.

தேவ செய்திகள் அடங்கிய இப்புத்தகத்தை வாசியுங்கள், கேளுங்கள், அதைக் கைக்கொள்ளுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

ஆண்டவரின் பணியில்,
*B.Arjunan & Glory*

Order From
World Literature Publications
P.O.Box.5, Batlagundu -624 202, South India.
E-mail:arjunanglory@gmail.com
Our Phone:04543 263278 Mobile :9443558041

Sharon Print System, Madurai -2 Phone 98421-33357

ரேடியோ மற்றும் டெலிவிஷன் தேவச் செய்திகள் 2009

கிறிஸ்துவின் சபையார் வழங்கும்
**கிறிஸ்துவின் வசனம்**
ரேடியோ மற்றும் டெலிவிஷன்
தேவச் செய்திகள்
2009



செய்தியாளர்
B.அர்ஜுனன்
Published by
THE WORD OF CHRIST
Vol.4

9443 558041 என்ற மொபைல் எண்ணுக்கு இன்றே தொர்பு கொள்ளுங்கள்

Cell : 94435 58041
Phone : 04543 263 278
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

## Our TV Program:

Every Monday 6.00 P.M on Tamilan TV
&
Every Saturday 8.00 P.M on Nambikkai TV

To

Postman Remarks (If Undelivered):
- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 19 | ஜூன் 2019 | கனி 7

கிறிஸ்துவின் வசனம்
உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16



THE WORD OF CHRIST



ஆசிரியர்
B. அர்ஜுனன்

Brothersoft

## Arjunan in Tamil:
Every Monday 6:00 - 6:15 pm on Tamilan TV
Every Saturday 8:00 - 8:30 pm on Nambikkai TV

## Hindi TV program:
Sunny, Francis, & Vinay David speaking. Sunday &Tuesday (7:00-7:30) pm on Shubhasandesh Hindi Channel

## P. K. Varghese in Malayalam:
Every Saturday 6:00-6:30 am on Jai Hind channel TV.

## Philemon & Kingsley in Tamil:
Every Sunday 6:45 - 7:00 am on Tamilan TV
Every Sunday 3:30 pm on Nambikkai TV






## Rajanayagam in Tamil:
Every Monday 7:00-7:15 am on Tamilan TV
Every Thursday 9:30-10:00 pm on Tamilan TV
Every Saturday 7:15-7:30 am on Tamilan TV



## P. R. Swamy and Douglas in Tamil:
Every Sunday to Wednesday at 5:30-5:45 pm on 31 meter band of Sri Lankan radio.

## Joshua & Ricky Gootam in Telugu:
Every Sunday at 6.00 p.m.on Subhavartha channel
Every Wednesday at 6:30 p.m. on Rakshana channel
Every Thursday at 11:00 a.m. on Rakshana channel
Satyavani T.V. online: www.sakthitv.in
Every Wednesday & Friday at 8:00 pm.
Every day at 7:30 a.m. and 3:30 p.m. on Kanthi TV in A. P. only.

**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
ஜெர்ரிபேட்ஸ் மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA



# வேத அறிவுப் போட்டி எண்: ௨௨௬


போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. இதோ, உம்மைப்போல நானும் தேவனால் உண்டானவன் நானும் மண்ணினால் உருவாக்கப்பட்டவன் என்றவன் யார்?
2. நான் பொய் சொல்லாமல் கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்லுகிறேன் என்ற அப்போஸ்தலன் யார்?
3. உண்மையானவனைக் கர்த்தர் தற்காத்து, இடும்புசெய்கிறவனுக்கு எவ்விதமாய்ப் பதிலளிப்பார்?
4. கர்த்தருக்குச் செவிகொடுக்கிறவன் எவனோ, அவன் விக்கினமின்றி வாசம்பண்ணி, ஆபத்திற்குப் பயப்படாமல் எப்படியிருப்பான்?
5. எதிர்பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளவேண்டுமென்று பவுல் யாருக்கு எழுதினார்?
6. மகிழ்ச்சியாயிருப்பதும், உயிரோடிருக்கையில் நன்மை செய்வதுமேயல்லாமல், வேறொரு நன்மையும் மனுஷனுக்கு இல்லையென்று அறிந்தேன் என்பவன் யார்?
7. அசுத்தமுள்ளவர்களுக்கும் அவிசுவாசமுள்ளவர்களுக்கும் ஒன்றும் எப்படியிராது?
8. என் வீட்டிலுள்ளதெல்லாவற்றையும் பார்த்தார்கள்; என் பொக்கிஷங்களில் நான் அவர்களுக்குக் காண்பியாத பொருள் ஒன்றும் இல்லை என்ற இராஜா யார்?
9. லேவியின் புத்திரரில் ஆசாரியத்துவத்தை அடைகிறவர்களும், ஆபிரகாமின் அரையிலிருந்து வந்த தங்கள் சகோதரரான ஜனங்களின் கையிலே எப்பிரமாணத்தின்படி தசமபாகம் வாங்குகிறதற்குக் கட்டளைபெற்றிருக்கிறார்கள்?
10. எரேமியா தீர்க்கதரிசி எவனைப் பார்த்து: கர்த்தருக்கு விரோதமாய்க் கலகம் உண்டாகப் பேசினாயே என்றான்?

## வேதாகம ஆய்வு... 11
## அபிகாயில்

1. மகிழ்ச்சிக்குரியவள் என்று அர்த்தம்.
2. நாபாலின் மனைவி – 1சாமு.25:3
3. மகா புத்திசாலி, ரூபவதியுமாயிருந்தாள் – 1சாமு.25:3
4. தாவீதுக்கு மனைவியானாள் – 1சாமு.25:42
5. காத்பட்டணத்தில் தங்கியிருந்தவர்களில் இவளும் ஒருத்தி – 1சாமு.27:3
6. இவள் அமலேக்கியரால் சிறைபிடித்துக் கொண்டுபோகப்பட்டாள் – 1சாமு.30:5
7. தாவீது கர்த்தருடைய ஆலோசனைப்படி எப்ரோனுக்கு இவளோடு குடியேறினான் – 2சாமு.2:2


Abigail

சிறுவர் பகுதி

# பரிகாசம் – Mocking

வேதபகுதி: 2இராஜாக்கள் 2:23-25

-Mohan



கர்த்தருக்குள் பிரியமான பிள்ளைகளுக்கு இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இன்று நாம் பரிகாசத்தைக் குறித்துப் பார்ப்போம்.

மற்றவர்களை பரிகாசம் செய்வது கர்த்தருக்கு கொஞ்சமும் பிடிக்காது. அப்படியிருக்கும்போது மற்றவர்களை பரிகாசம் செய்யலாமா? கூடாது இல்லையா. எலிசாவின் நாட்களில் அவர் ஒருமுறை பெத்தேலுக்குப் போனாரு. வழியில் நடந்துபோகையில் பிள்ளைகள் பட்டணத்திலிருந்து வந்து, எலிசாவைப்பார்த்து என்னசொன்னாங்கனு தெரியுமா? மொட்டைத்தலையா ஏறிப்போ, மொட்டத்தலையா ஏறிப்போ என்று சொல்லி நிந்தித்தாங்க. எதற்கு மொட்டத்தலையா ஏறிப்போ மொட்டத்தலையா ஏறிப்போ என்று சொன்னாங்கனா எலிசாவுக்கு முன்பாக இருந்த தீர்க்கதரிசி எலியா அவர் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். ஆகையால் இந்த பிள்ளைகள் எலிசாவையும் பார்த்து இப்படியாக சொல்லி கேலி செய்தாங்க. இப்படி செய்தா யாருக்குதான் கோபம் வராம இருக்கும்.

உடனே எலிசா என்ன செய்தாரு தெரியுமா? அவர் திரும்பி அந்தப்பிள்ளைகளைப் பார்த்து சபித்தார்; உடனே காட்டிலிருந்து இரண்டு கரடிகள் வந்து அங்கே கூடியிருந்த பிள்ளைகளை பிறீப்போட்டது. ஏன் அப்படி கேலி செய்யனும் கேலி செய்ததாலே தானே அந்தப் பிள்ளைகளை கரடி வந்து பிறீப்போட்டது. கேலி செய்யாம இருந்திருந்தால் எலிசா தாத்தா நல்ல கதைகளை சொல்லியிருப்பாரு, இல்லைனா ஒரு அற்புதம் செய்திருப்பாரு. பெத்தேலுக்கு வருவதற்கு முன்புதான் ஒரு அற்புதம் செய்தாரு அது என்ன வென்று தெரியுமா? சொல்றேன் கவனமா கேளுங்க. பட்டணம் குடியிருப்பதற்கு நல்லதா இருந்தது ஆனா அங்கே இருந்த தண்ணீர் கெட்டது, நிலமும் பாழ்நிலமாயிருந்தது. அப்பொழுது எலிசா ஒரு புதுத்தோண்டியை எடுத்து அதிலே உப்புப் போட்டுக் கொண்டுவாருங்கள் என்று சொன்னார் அந்தப்படியாக கொண்டுவந்தார்கள். எலிசா அந்த நீரூற்றண்டைக்குப்போய், உப்பை அதிலே போட்டு இந்தத் தண்ணீரை ஆரோக்கியமாக்கினேன்; இனி இதினால் சாவும் வராது, நிலப்பாழும் இராது என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல்லி அதை சரிசெய்தார். எப்படிப்பட்ட அற்புதம் பார்த்தீர்களா? தேவனுடைய அற்புதங்களை அறியாத இந்தப்பிள்ளைகள் எலிசாவைக் பரிகாசம் செய்ததால் 42 பிள்ளைகளை கரடி பிறீப்போட்டது. நாமும் தேவனுடைய மக்களை பரிகாசம் செய்யாது அவர்களுடைய ஆசீர்வாதமான வார்த்தைக்கு காத்திருப்போம்.

**மனப்பாட வசனம்:** **"பரியாசக்காரன் ஞானத்தைத் தேடியும் கண்டுபிடியான்; புத்தியுள்ளவனுக்கோ அறிவு லேசாய்வரும்" - நீதிமொழிகள்14:6**

‘தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்’ மாத இதழை ஒவ்வொரு மாதமும்
10ம் தேதியே Whatsapp மூலம் பெற்றுக்கொள்ள 6379350509
என்ற எண்ணோடு தொடர்பு கொள்ளுங்கள்
அல்லது 9443558041 என்ற எண்ணுக்கு SMS அனுப்புங்கள்



தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 19 ஜூன் -2019 கனி - 7

ஆசிரியருரை

## யார் நீதிமான்
## Who Is Just



உலகத்தில் தங்களை நீதிமான்களாக காண்பித்துக்கொள்ளுகிறவர்களை நீங்கள் அறிவீர்கள். உண்மையிலே யார் நீதிமான் என்று பார்க்கும்போது; இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்டவர்களே நீதிமான்கள் என அப்போஸ்தலனாகிய பவுல் ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதும் கடிதத்தில் நாம் காண்கிறோம். "இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்" (ரோம.3:24). மற்றபடி நீதிமான் ஒருவனாகிலும் இல்லை என காண்கிறோம். உலகத்தில் உள்ள யாவரும் பாவத்தின் கீழ்அடைக்கப்பட்டனர். ஆகையால் ஆதாம் முதல் மோசே வரை பாவம் செய்யாதவர்களையும் பாவம் ஆட்கொண்டது என திருமறை நமக்குப்போதிக்கிறது. ஒரு மனிதன் கர்த்தரை அறிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்யும்போது அப்படிப்பட்ட மனிதனை கர்த்தர் பாவத்தின் பிடியிலிருந்து விடுவிக்கிறார். அதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? லோத்து என்ற மனிதனை அந்தவிதமாக விடுவித்தார்; அவன் "அக்கிரமக்காரருக்குள் வாசமாயிருக்கையில் தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட நீதிமானாகிய லோத்தை அவர் இரட்சித்திருக்க; கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்" என பேதுரு நமக்கு எடுத்துரைக்கிறார் (2பேது.2:7-9).

சோதோம் கொமோரா ஜனங்கள் தேவனுக்கு விரோதமான பாவத்தில் ஈடுபட்டனர். அவனிடத்தில் வந்த தேவதூதர்களை அறியும்படி அவர்களை எங்களிடம் அனுப்பும் என்று லோத்தின் கதவை தட்டினர். இதை கேட்ட லோத்து இந்த அக்கிரமத்தை செய்யவேண்டாம் புருஷனை அறியாத இரண்டு குமாரத்திகள் என்னிடத்தில் இருக்கிறார்கள் அவர்களை உங்களிடத்திற்கு அனுப்புகிறேன். என்னிடத்தில் வந்த அந்த மனுஷர்களுக்கு ஒன்றும் செய்யவேண்டாம் என்றான். தன்னுடைய குடும்பத்திற்கு அநீதி ஏற்பட்டாலும் பரவாயில்லை, ஆனால் என்வீட்டிற்கு வந்தவர்களுக்கு எந்த விதத்திலும் அநியாயம் நடக்க அனுமதிக்க மாட்டேன் என்ற தீர்மானத்தோடு இந்த வார்த்தைகளைச் சொன்னான். பொதுவாக ஜனங்கள் மற்றவர்களுக்கு என்ன நடந்தால் என்ன? நம் குடும்பத்தாருக்கு ஒன்றும் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றுதான் நினைப்பார்கள். ஆனால் லோத்து அந்த விதமாக நினைக்கவில்லை. தம்மிடம் வந்தோரை காப்பாற்றும்படியாக, புருஷனை அறியாத தன்னுடைய பிள்ளைகளை அந்த கொடூரமான ஜனங்களுக்கு கொடுக்கவும் அவன் யோசிக்கவில்லை. நீங்களாக இருந்தால் அந்த இடத்தில் என்ன செய்திருப்பீர்கள் என்பதை சற்றே யோசிக்கும்படி உங்களை கேட்கிறேன்.

இச்செய்தியை வாசிக்கும் வாசகரே, அந்த அளவு சோதோமின் ஜனங்கள் மிகவும் மோசமாக இருந்தார்கள். அப்படிப்பட்ட ஜனங்களுக்குள்ளே வாழ்ந்தவன் நீதிமானாகிய லோத்து. அவனை அந்த அக்கிரமங்கள் மிகுந்த ஜனங்களிலிருந்து இரட்சித்து, கர்த்தர் அந்த பட்டணங்களை கந்தகத்தினால் அழித்துப்போட்டார். இன்று வரை அது ஒன்றும் விளையாத பூமியாகவே இருக்கிறது. அன்று லோத்தை இரட்சித்த கர்த்தர் இன்று ஆண்டவர் இயேசுவின் மூலமாக தமக்கும் தம்முடைய வல்லமையுள்ள வசனங்களுக்கும் கீழ்ப்படிவோரை இரட்சிக்கிறார். "இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே" என்ற நம்பிக்கையை நமக்கு ஏற்படுத்துகிறார் பவுல் (ரோம.5:9).

ஒரு நீதிமான் எப்படியிருக்கவேண்டும்? வெள்ளை ஆடைகளை உடுத்தி விட்டால் அவர் பரிசுத்தமானவர் என்றல்ல. உள்ளமும் அவ்விதமாகவே இருக்கவேண்டும். இதை பரிசுத்தப்படுத்த வல்லமையுள்ளது கர்த்தருடைய வசனமே. கர்த்தருடைய வசனத்தை ஏற்றுக்கொள்ளாத ஒரு நபர் தன்னை பரிசுத்தப்படுத்த முடியாது. இதைக்குறித்து நாம் எசேக்கியேல் புத்தகத்தில் வாசிக்கலாம்; "ஒருவன் நீதிமானாயிருந்து, நியாயத்தையும் நீதியையும் செய்து, மலைகளின்மேல் சாப்பிடாமலும், இஸ்ரவேல் வம்சத்தாரின் நரகலான விக்கிரகங்களுக்கு நேராகத் தன் கண்களை ஏறெடுக்காமலும், தன் அயலானுடைய மனைவியைத் தீட்டுப்படுத்தாமலும் தூரஸ்திரீயோடே சேராமலும், ஒருவனையும் ஒடுக்காமலும், கொள்ளையிடாமலுமிருந்து, கடன் வாங்கினவனுக்கு அடைமானத்தைத் திரும்பக்கொடுத்து, தன் அப்பத்தைப் பசித்தவனுக்குப் பங்கிட்டு, வஸ்திரமில்லாதவனுக்கு வஸ்திரம் தரிப்பித்து, வட்டிக்குக் கொடாமலும் பொலிசை வாங்காமலும், அநியாயத்துக்குத் தன் கையை விலக்கி, மனிதருக்குள்ள வழக்கை உண்மையாய்த் தீர்த்து, என் கட்டளைகளின்படி நடந்து, என் நியாயங்களைக் கைக்கொண்டு, உண்மையாயிருப்பானாகில் அவனே நீதிமான்; அவன் பிழைக்கவே பிழைப்பான் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்" (எசே.18:5-9). இப்படிப்பட்ட மனிதர் எங்கே இருக்கிறார்கள் என்று நினைக்கத்தோன்றும். ஆகையினாலே வோதாகமம் எல்லோரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்களானார்கள் என்று சொல்லுகிறது. இப்படிப்பட்டவர்களை இரட்சிக்க தேவனுடைய குமாரனாகிய இயேசு வெளிப்பட்டார். ஆக ஒருவன் நீதிமானாயிருந்து நியாயத்தை செய்யும்போது அவன்மீது கர்த்தர் கண்ணோக்கமாயிருப்பார். நம்முடைய முற்பிதாக்களின் காலத்தில் நோவா அந்தவிதமாக இருந்தபோது அவனை கண்ணோக்கிப்பார்த்தார். "நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான்" (ஆதி.6:9). ஆனால் அநேகருடைய பதில் இந்த மக்கள் மத்தியில் ஒரு நீதிமானாக வாழவேமுடியாது என்பதுவே. பாருங்கள் மனிதர்கள் தங்களை கெடுத்துக்கொண்டிருந்த காலத்தில் நோவா நீதிமானாகவும் உத்தமனாகவும் இருந்தான். தேவனோ மனிதர்களைப் பார்த்து மிகவும் வேதனை கொண்டார். கர்த்தர் மனிதனை உண்டாக்கியதற்காக மனஸ்தாபப்பட்டார் என்றெல்லாம் அறிகிறோம். அவர் மனஸ்தாபப்படுகிற அளவுக்கு அவ்வளவு மோசமாக ஜனங்கள் தங்களை கெடுத்துக்கொண்டிருந்தார்கள். இன்றைக்கும் கூட அநேக மோசமான காரியங்களை நாம் பார்க்கும்போது மனவேதனை அடைகிறோம். தேவன் ஏன் இன்னும் பொறுமையாயிருக்கிறார். இவர்களையெல்லாம் அழித்துப்போட்டால் நலமாக இருக்கும் என்று எண்ணிவிடுகிறோம். நமக்கே சிலவேளைகளில் சகிக்கமுடியாதிருக்கும்போது, அந்நாட்களில் ஆபிரகாம் எப்படி சகித்துக்கொண்டு தேவனுடைய திருசித்தத்தை நிறைவேற்றியிருப்பார் என்பதை எண்ணிப்பாருங்கள். அவனைப்போல நாமும் இருக்க



நாம் அவரை சீர்தூக்கிப்பார்க்க வேண்டும்.

1. சிந்தித்துப் பார்ப்பது இந்த வார்த்தை புதிய ஏற்பாட்டில் வேறெங்கும் பயன்படுத்தப்பட வில்லை. இதன் அர்த்தம் ஒரு ஒப்பீடு செய்வதாகும். இயேசுவின் பாடுகளுக்கும் நம்முடைய பாடுகளுக்கும் ஒரு ஒப்பீடு செய்து நாம் எப்படி உறுதியாயிருக்க வேண்டுமென்று சிந்திக்க வேண்டும்.

2. அவர் எப்படி சிலுவையை சகித்தார் என்று மட்டுமல்ல அதற்கு முன்பு தன் (சரீர) வாழ்விலும் எப்படி சகித்தார் என்று சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். எவ்வளவு களைப்புள்ளவராயிருந்திருப்பார் தம்முடைய சொந்த ஜனங்களின் அவநம்பிக்கை, பல சமயங்களில் தம்முடைய அப்போஸ்தலர்களால் வெளிப்படுத்தப்பட்ட பெலவீனமான விசுவாசம் உறக்கமற்ற ஒரு இரவுக்குப் பின் சிலுவையில் அனுபவித்த பயங்கரமான மனவேதனை.

3. அவர் எல்லாவற்றிலும் பெரிய வேதனையை அனுபவித்தார் எல்லாவற்றுக்கு மேலான கனம் பெற்றார்.

4. சிலுவையினால் வரும் நன்மைகளை அதிகமாகவும் அதனால் நம்மேல் வரும் அவமானங்களை குறைவாகவும் எண்ணிப்பார்க்கவேண்டும்.

5. நம்முடைய கர்த்தரை தியானிப்பது நமக்கு வரும் களைப்பையும் சோர்வையும் அதைரியத்தையும் தடை செய்யும்.

**நிறைவாக**

விசுவாச ஓட்டத்தை ஓடுவதற்கு நமக்கு எதிர் மறையானவைகளும் நேர்மறையானவைகளும் தேவைப்படுகிறது.

எதிர்மறையாக நமக்குத் தடையாயிருககிறவைகளை தூரத்தள்ளிவிட வேண்டும்.

நேர்மறையாக நாம் நமது கவனத்தை நமக்கு இரட்சிப்பையளித்த இயேசுவின்மீது வைத்துவிடவேண்டும்.

2. இந்த இரண்டு நிகழ்வுகளிலும் தேவனுடைய வார்த்தை மிக முக்கியமானது (வேதாகமம்).

ஏனென்றால் அதில் எது எதையெல்லாம் தள்ளிவிட வேண்டுமென்று கற்றுக்கொள்ளுகிறோம். அதிலே நாம் நம்முடைய கர்த்தரைப் பற்றி அறிந்து கொள்ளுகிறோம். அவர் எதை சகித்தார் எப்படி அவருடைய மாதிரி நமக்கு உந்து சக்தியாக (தூண்டுதலாக) இருக்க முடியும் என்று தெரிந்துகொள்ளுகிறோம்.

3. மற்ற பந்தயங்களை விடவும் இந்தப் பந்தயம் ஒருவகையில் மாறுபட்டது பொதுவாக ஒரு பந்தயம் என்பது போட்டி நிறைந்தது. அதில் யார் முதலாவது வருகிறார்களோ அவர் பரிசு பெறுவார். ஆனால் இந்தப் பந்தயம் போட்டியல்ல, நாங்கள் இந்த ஓட்டத்தை ஓடும்போது உங்களையும் ஓட உற்சாகப்படுத்துகிறோம்.

Contact Us: 94435 58041



JOIN OUR
WORLD EVANGELISM BIBLE SCHOOL
RIGHT NOW

2. பேதுரு எப்படி மத்.14:30ல் தன் கண்களை இயேசுவானவரை விட்டு எடுத்தபோது அவைகளைப் பார்த்து கடலில் அமிழத்தொடங்கினாரே அதே போலவே நம்முடைய கிறிஸ்தவ ஓட்டத்தில் ,இயேசுவை விட்டு வேறு எதிலாகிலும் கவனம் செலுத்தினால் நம்முடைய பாதையை விட்டு விட்டு ஓடச் செய்யும்.

3. இதிலிருந்து யோசனையாய்ச் சொல்வது. ஆவிக்குரிய வெற்றிக்கு சூத்திரம்.

நீங்கள் மனச்சோர்வைடைய நினைத்தால் - உங்களையே பார்த்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் தோற்கடிக்கப்பட விரும்பினால் - பின்னோக்கிப் பார்க்கவும் .

நீங்கள் பாதை விலகிச் செல்ல விரும்பினால் - சுற்றிலும் பார்.

நீங்கள் பயப்படுத்தப்பட விரும்பினால் - முன்னே பார்க்கவும்.

நீங்கள் விடுதலை பெற விரும்பினால் - மேலே பார்க்கவும் மேலானவைகளையே நாடுங்கள் (கொலோ.3:2)

இயேசுவே விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவரும்.

1. அவரே நம் இரட்சிப்பின் தலைவர். (எபி.2:10) அவரே துவக்கமும் முடிவுமானவர். முதலும் முடிவுமானவர் அல்பாவும் ஓமேகாவுமானவர் (வெளி.1:8).

2. அவரே ஆக்கியோன் (தலைவர் அல்லது நடத்துனர்) நாம் பின்பற்றும்படியான மாதிரியை அவரே வைக்கிறார். அவர் நமக்காக ஓட்டத்தை ஓடி பாதையமைத்தவர். தாமே அந்த ஓட்டத்தை ஓடி முடித்தார்.

நமக்கு முன்னோடியாக பரிசுத்த பர்வதத்தில் பிரவேசித்துள்ளார் (எபி.6:19-20).

நமக்கு அவர் புதிய ஜீவ பாதையை திறந்திருக்கிறார் (எபி.10:20)

3. அவரே நம் ஓட்டத்தை முடிக்கிறவர் அல்லது பரிபூரணமாக்குகிறவர். முடிக்கிறவர் என்றால் ஒன்றை வெற்றிகரமான முடிவுக்குக் கொண்டுவருகிறவர்.

4. இப்போது நாமே அதை முடிக்கும்படி உதவி செய்கிறார். மேலும் தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்போதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றும் முடிய இரட்சிக்க வல்லமையுள்ளவராயுமிருக்கிறார் (எபி.7:25).

அவருக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த சந்தோஷத்தின் பொருட்டு அதை நோக்கி இந்த ஓட்டத்தை வெற்றிகரமாக ஓடி முடித்தார்.

1. சிலுவையை நோக்கியதன் மூலம் எப்படி அவருக்கு சந்தோஷம் கிடைத்திருக்க முடியும்?

ஏதேன் தோட்டத்திலே தோற்றுப்போன மனிதனின் சோகமான தோல்வியை மாற்றுவதன் மூலம் கிடைக்கும் சந்தோஷத்தைப் பார்த்தார்.

சாத்தானைத் தோற்கடிப்பதிலுள்ள மகிழ்ச்சியைப் பார்த்தார். மீட்கப்பட்டவர்கள் பரலோகத்திற்குள் செல்வதைப் பார்ப்பதிலுள்ள மகிழ்ச்சியைப் பார்த்தார்.

2. இந்த மகிழ்ச்சியின் எதிர்பார்ப்போடு இயேசு சிலுவையை சகித்தார் (சரீர வலி).

அவமானத்தை ஒரு பொருட்டாக எண்ணாமல் (உணர்ச்சி பூர்வமான ஆவியின் மனவேதனை) பொருட்டாக எண்ணாமல் என்றால் அதைப்பற்றி பெரிதாக நினைக்காமல் தள்ளிவிடுவது தனக்கு முன்பாக வைத்திருந்த மகிழ்ச்சியை இயேசு பார்த்ததுபோல நாமும் இயேசுவையே வழியில் நோக்க வேண்டும்.

என்ன சோதனை வந்தாலும் நாம் இயேசுவை நோக்கிப்பார்க்க வேண்டும் ஏனென்றால் அவர் இன்னும் மோசமான துன்பத்தை சகித்தார்.



முடியும் என்பதற்கு நோவா அடையாளமாக இருக்கிறார். அதைப்போல தன் அயலானுடைய மனைவியைத் தீட்டுப்படுத்தாமலும் என்று வாசிக்கக்கேட்டோம். யோபு என்ற தாசனை அறிவீர்கள். அவன் சொல்லும்போது; "என் மனம் யாதொரு ஸ்திரீயின்மேல் மயங்கி, அயலானுடைய வாசலை நான் எட்டிப்பார்த்ததுண்டானால், அப்பொழுது என் மனைவி வேறொருவனுக்கு மாவரைப்பாளாக" என்கிறார் (யோபு 31:9,10). இப்படி சவால் விடும் தேவனுடைய தாசர்கள் நீதிமான்களாக இப்பூவில் வாழ்ந்து மரித்தார்கள். இன்றைக்கு நம்மால் இப்படி சவால் விடமுடியுமா? நம்முடைய மனச்சாட்சிக்கு தெரியும் நாம் எப்படி வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்று. யோபு இரட்டத்தனையான ஆசீர்வாதங்களை தேவனுடைய சமுகத்தில் பெற்றுக்கொண்டார் என்றால் அவர் இத்தனை பாடுகளின் மத்தியிலும் தேவனை தூஷிக்கவில்லை. தன்னுடைய நம்பிக்கையில் தளர்ந்துபோகவும் இல்லை. தேவனுடைய வார்த்தைகளை கேட்கும்போது தன்னுடைய வாயைப் பொத்திக்கொண்டு அவைகளைக் கேட்டார். நம்மில் எத்தனைபேர் கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்கும்போது முழுவதுமாக அவைகளுக்கு செவிகொடுக்கிறோம். சிலர் அவர்களுடைய எண்ணங்களுக்கு ஏற்றார்போல இருந்தால் இன்னும் கொஞ்சம் கேட்போம் என்பார்கள் இல்லாவிடில், தங்களுடைய சிந்தையை வேறே பக்கம் திருப்பிவிடுவார்கள். அன்பானவர்களே, நம்முடைய முற்பிதாக்களின் சரித்திரத்தை சற்று வாசித்து அவர்களுடைய நற்காரியங்களை எடுத்துக்கொண்டு நீங்களும் அவைகளின்படி நடக்க முற்படுங்கள். அப்பொழுது அவர்களை இரட்சித்த கர்த்தர் உங்களையும் இரட்சிப்பார்.

அதைப்போல ஆபிரகாம் கர்த்தருடைய கட்டளைகளின்படி நடந்து, அவருடைய நியாயங்களைக் கைக்கொண்டு கர்த்தருடைய சொல்லுக்கு கீழ்ப்படிந்து நடந்தார். ஆகையால் அவர் விசுவாசிகளின் தகப்பன் என்று அழைக்கப்பட்டார். அவரைப்போல ஜீவனம்பண்ணி தன் பணத்தை வட்டிக்குக் கொடாமலும் பொலிசை வாங்காமலும், அநியாயத்துக்குத் தன் கையை விலக்கி, மனிதருக்குள்ள வழக்கை உண்மையாய்த் தீர்த்து, என் கட்டளைகளின்படி நடந்து, என் நியாயங்களைக் கைக்கொண்டு, உண்மையாயிருப்பானாகில் அவனே நீதிமான்; அவன் பிழைக்கவே பிழைப்பான் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். இன்று நீங்கள் கர்த்தருடைய சத்தத்தை கேட்பீர்கள் என்றால் பாவத்திற்கு விலகி உங்களை நீதிமான்களாக மாற்றும் கர்த்தருடைய சத்தத்திற்கு செவிகொடுத்து அவருடைய நீதி நியாயங்களைக் கைக்கொள்ளுங்கள். "பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்; குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை; நீதிமானுடைய நீதி அவன்மேல் தான் இருக்கும், துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன்மேல்தான் இருக்கும்" என கர்த்தருடைய வசனம் சொல்லுகிறது (எசே.18:20). பாவிகளின் மத்தியில் வாழ்ந்த லோத்தை கர்த்தர் இரட்சித்தார் என நாம் தியானித்தோம். அதைப்போல பாவிகளின் மத்தியில் பாவமில்லாதவராக இவ்வுலகத்திலே வாழ்ந்து சிலுவையில் தம்மை தியாக பலியாக ஒப்புக்கொடுத்த இயேசுவை நோக்கிப்பாருங்கள். அப்பொழுது பிழைப்பீர்கள்.

பாவம் பல வழிகளில் வருகிறது. இதை ஒருவன் மேற்கொள்ள அவன் கர்த்தருடைய வசனங்களுக்கு தன்னை முற்றிலுமாக அர்ப்பணிக்கவேண்டும். பாவத்தினால் அவனுடைய சரீரமட்டுமல்ல அவனுடைய ஆத்துமா நிரந்தர அழிவைநோக்கி செல்கிறது. பாதாளத்திற்கு இறங்குகிறவன் இனி ஏறிவரான் என காண்கிறோம். பாதாளம் அப்படிப்பட்டவர்களை விழுங்கிவிடுகிறது. ஆகையால் அன்பு சகோதரனே, சகோதரியே இதோ ஒரு அருமையான தருணம். இந்த பூமியில் நீ ஒரு நீதிமானாக வாழ்ந்து மரிக்கவேண்டும். பாவத்தோடு மரிப்பாயானால் பாவிகளுக்காகவும், பாவத்தை

தூண்டுபவனுக்காகவும் நியமிக்கப்பட்ட இடமாகிய நித்திய அழிவை அடைவாய். மனிதன் தேவசாயலில் படைக்கப்பட்டான். தேவனோடு என்றென்றுமாக வாழும்படியாக படைக்கப்பட்டான். ஆகையால் அவனை படைத்த கர்த்தர் அவன் இழந்ததை மீட்டுத்தரும்படியாக தம்முடைய குமாரனையே இவ்வுலகிற்கு அனுப்பினார். அவருடைய வசனத்திற்கு நீ கீழ்ப்படிந்து பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு இயேசுவின் இரத்தினாலே கழுவப்படு அப்பொழுது உன்னை அவர் நீதிமானாக மாற்றுவார். பின்பு கர்த்தருடைய சபையில் அவரால் நீ சேர்க்கப்படுவாய். உன்னுடைய நாமத்தை அவருடைய ஜீவபுத்தகத்தில் அவர் எழுதுவார். அப்பொழுது நீ இரட்சிக்கப்படுவாய். இன்றே இந்த காரியங்களை செய்ய உன்னை முழுவதுமாக அவருக்கு ஒப்புக்கொடு. உன்னை நீயே நீதிமான் என்று நினைத்துக்கொண்டு மோசம்போகாமலிருக்க கர்த்தருடைய வசனத்தோடு உன்னை ஒப்பிட்டுப்பார். அது உன்னுடைய பாவத்தையும் உன்னுடைய அக்கிரமத்தையும் உன் கண்முன்னே வந்து நிறுத்தும். வேதமே வெளிச்சம் என காண்கிறோம். இருளில் உள்ள ஸ்தலத்தில் வாழும் நீ வெளிச்சத்திலே வெளிச்சம் காண வேதத்தை நேசி அதைப் பற்றிக்கொள். அது உன்னை நீதிமானாக மாற்றும்.

**நீதிமானுக்கு ஒரு கேடும் வராதா?**

நீதிமானுக்கு பல சோதனைகள் வரும். ஆனால் அந்த சோதனைகள் எல்லாவற்றிலிருந்தும் கர்த்தர் அவனைக் காப்பார். "நீதிமானுக்கு ஒரு கேடும் வராது; துன்மார்க்கரோ தீமையினால் நிறையப்படுவார்கள்" என நீதி.12:21-ல் படிக்கிறோம். நீதிமானாக வாழ்வது மிகவும் கடினம் என்று சொல்லி அநேகர் துன்மார்க்கத்தை தெரிந்துகொள்கின்றனர். துன்மார்க்கத்தின் முடிவு அழிவு என்பதை மறந்துபோகவேண்டாம். நீதிமான்களோ தங்களுடைய மரணத்திலும் நம்பிக்கையுள்ளவர்கள். கர்த்தர் அவர்களை எழுப்ப வல்லவராயிருக்கிறார். ஆகையால் நீதிமானுக்கு ஒரு கேடும் வராது என்பதை அறிந்துகொள்ளுங்கள். நீதிமான்களைக்குறித்து நீதிமொழிகள் புத்தகத்தில் நாம் அதிகமாக படிக்கிறோம். நீதிமான்களின் ஜெபத்தை கர்த்தர் கேட்கிறார். நீதிமான் தனக்குத் திருப்தியாகப் புசிக்கிறான். நீதிமான் பொய்ப்பேச்சை வெறுக்கிறான். நீதிமான் தன் அயலானைப்பார்க்கிலும் மேன்மையுள்ளவன். நீதிமான்களுடைய நினைவுகள் நியாயமானவைகள். நீதிமானுடைய பலன் ஜீவவிருட்சம். நீதிமான் இக்கட்டினின்று விடுவிக்கப்படுவான். நீதிமானுடைய வாய் ஜீவஊற்று. நீதிமான்களுடைய பாதை நடுப்பகல்வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம்போலிருக்கும் என்றெல்லாம் படிக்கிறோம். ஆகையால் நீதிமானுக்கு ஒரு கேடும் வராது. அவன் நீதியாய் நடக்கிறான். ஆகையால் நீதியுள்ள கர்த்தர் அப்படிப்பட்டவர்களுக்கு இரக்கம் செய்வார். உங்களுக்கும் கர்த்தர் இரக்கம் செய்ய நீங்களும் ஒரு நீதிமானாக இருக்க முற்படுங்கள்.

**நடப்புச்செய்திகள்**

❒ புனே அருகே, மகனை கடித்த சிறுத்தைப்புலியை அவனது தாய் விரட்டியடித்து மேற்கொண்டாள்.

❒ பணத்தின் மீதான நாட்டத்தைக் கைவிடும்படி ஈஸ்டர் உரையில் கத்தோலிக்க மதத் தலைவர் போப் பிரான்சிஸ் அறிவுறுத்தியுள்ளார்.

❒ விண்வெளிக்கு நாசா அனுப்பிய 'டெஸ்' செயற்கைக்கோள், முதல் முறையாக பூமியை போன்று அதே அளவிலான புதிய கிரகத்தை கண்டுபிடித்துள்ளது.



## விசுவாச ஓட்டத்தை ஓடுவது
## Running The Race of Faith
(எபிரெயர் 12:1-3) பாடம் - 32

*-Jerry*




-சென்ற மாத இதழின் தொடர்ச்சி

விசுவாச ஓட்டமென்பது நீண்டதூர ஓட்டம் குறுகிய தூர ஓட்டமல்ல.

1. பந்தயம் எளிதில் முடிந்துவிடக்கூடிய உடனடி சக்தியோடு ஓடுவதல்ல இது.

2. இந்த ஓட்டத்தை நீண்டகாலம் ஓடுவதற்கு விடா முயற்சி வேண்டும்.

3. அதுவும் ஒரு ஓட்டம்தான்.

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது ஏதோ உணர்ச்சி வசப்படுவதோ அல்லது சில அனுபவங்களால் இரட்சிக்கப்பட்டேன் என்று நினைப்பதோ கிடையாது.

இது ஏதோ ஒரு பூங்காவில் பொழுது போக்க நடப்பதல்ல. ஆனால் சக்தியும் கடைசிவரை ஓடக்கூடிய உறுதியும் தேவைப்படும் ஓட்டப்பந்தயம்.

இது உழைப்பு நிறைந்த வாழ்க்கை இங்கே குறிப்பிடப்பட்டுள்ளபடி மிகக் கடினமாக போராடி ஓடக்கூடிய ஓட்டம்.

சகித்து போராடி ஓடக்கூடிய ஓட்டம்.

சகித்துபோராடுவது என்பது அவசியமான தகுதி.

1. ஓடுகிற ஒருவர் ஓட்டத்தை முடிக்காவிட்டால் அவருக்கு ஒன்றும் கிடையாது. நம்முடைய கிறிஸ்தவ ஓட்டம் முடியுமுன்னே நிறுத்திவிட்டால் நித்திய மகிமையை எதிர்பார்க்க முடியாது.

நன்மை செய்வதில் சோர்ந்து போகாதிருப்போமாக நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம் (கலா.6:9).

2. எபிரெய எழுத்தாளர் முன்னதாக ஆபிரகாமின் மாதிரியை மேற்கோள் காட்டுகிறார். அந்தப்படியே அவன் பொறுமையாய்க் காத்திருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெற்றான் (எபி.6:15).

3. இயேசுவானவர் தன்னுடைய சீடர்களுக்கு பொறுமையோடு சகிப்பதைக் கற்றுக் கொடுத்திருக்கிறார் (பொறுமை)

குறிப்பிட்ட அளவுள்ள வேலைக்காக சீடர்களை தயார் செய்ததில் நீங்கள் என் நாமத்தினிமித்தம் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள். முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான் (மத்.6:22).

இதே உண்மைதான் ஒலிவமலையின் மீதும் சொல்லப்பட்டது (மத்.24:13).

பவுல் எழுதுகிறார். சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பேன் ஆகவே இந்த விசுவாச ஓட்டத்தை ஓடுவதற்கு பொறுமை மிகவும் தேவையாயிருக்கிறது.

நாம் இயேசுவையே நோக்கிப் பார்க்கவேண்டும் (12:2,3)

நாம் ஓட்டத்தை ஓடும்போது நமது கவனமெல்லாம் இயேசுவின் மீது இருக்கவேண்டும்.1. NASH மொழி பெயர்ப்பில் நமது கண்களை இயேசுவின்மீது பொருத்த வேண்டுமென்கிறார். இதன் யோசனை உறுதியாய் அல்லது நிலையாயிருப்பது.

## வேதகம கேள்விகள்

வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்

ஆம் எனில் ☑ குறியிடவும்



**தற்சோதனை பகுதி - 8**

**8. கணவன் மனைவி இவ்விருவரில் கணவனே தலையாயிருக்க வேண்டுமா?**

1. என்னத்திலாயெனில், முதலாவது ஆதாம் உண்டாக்கப்பட்டான் ☐ வசன ஆதாரம் ------------------------------------------------

2. புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்த ஸ்திரீயானவளுக்கு உரிமையுண்டு ☐ வசன ஆதாரம்------------------------------------------------

3. புருஷன் மனைவிக்கு தலையாயிருக்கிறான் ☐ வசன ஆதாரம்------------------------------------------------

4. அதற்காக ஸ்திரீகள் புருஷருக்கு கீழ்ப்படியவேண்டியதில்லை ☐ வசன ஆதாரம் ------------------------------------------------

5. ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியவேண்டும் ☐ வசன ஆதாரம்------------------------------------------------

6. குடும்ப பொறுப்பு முழுவதையும் தேவன் ஸ்திரீகளிடம் கொடுத்துள்ளார் ☐ வசன ஆதாரம்------------------------------------------------

7. புருஷனுடைய சரீரத்திற்கு மனைவியே அதிகாரி ☐ வசன ஆதாரம்------------------------------------------------

8. எனவே ஸ்திரீயானவள் இந்த அதிகாரத்தை பயன்படுத்தி தலைவியாகலாமா? ☐ வசன ஆதாரம்------------------------------------------------

9. ஏற்ற துணையாக புருஷனுக்காக உண்டாக்கப்பட்டவள் ஸ்திரீ ☐ வசன ஆதாரம்------------------------------------------------

10. ஸ்திரீயானவளுக்கு அவருடைய பெற்றோரே என்றும் துணை ☐ வசன ஆதாரம்------------------------------------------------

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதை கண்டுபிடித்து குறியிடுங்கள்**
**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**
**இப்பகுதியை கத்தரிப்பதோ அல்லது வெட்டியெடுப்பதோ குற்றம்.**
**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**



## பழைய பாவமனிதன் களையப்படுதல்

**Putting Off The Old Man of Sin**

திருடுதல் - **Stealing**

*-J.C.Choate*

உங்களுக்கு நன்றி. மீண்டும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களிடத்தில் வருகிறேன்.

தற்போதைய இப்பாடங்களில் ஒரு உலகப்பிரகாரமான மனிதனுக்கும், ஒரு கிறிஸ்தவனாக மாறியிருக்கிறவனுக்கும் உள்ள வித்தியாசத்தைக் காண்பிக்க முயற்சிக்கின்றேன். நீங்கள் எப்பொழுதாவது இந்த வித்தியாசத்தைக் கண்டிருப்பீர்களென்றால் அதன்பின் கிறிஸ்து உங்களுக்காக மெய்யாகவே என்ன செய்ய இயலும் என்பதை நீங்கள் கண்டுகொள்ள முடியும் என நம்புகிறேன்.

நாம் நமது பாடத்தில் தேவனுடைய வார்த்தையைத் தொடர்ந்து படிக்கையில் "களவு செய்தல்" என்பது குறித்து நாம் ஆலோசிக்க வேண்டியது அவசியம். இப்போது இதுபோன்ற விஷயத்திற்காக நாம் ஏன் நேரத்தைக் கழிக்கவிரும்புகிறோம். சாதாரணக் காரணத்திற்காக இது வேதாகமத்தில் அடிக்கடி பேசப்படுகிறது. ஏனென்றால் இன்று உலகத்தில் இது ஒரு பெரிய பிரச்சனையாக இருக்கிறது.

மோசேயின் கட்டளையின் கீழ், பத்துக் கற்பனைகளில் "களவு செய்யாதிருப்பாயாக" (யாத்.20:15) என்பது ஒன்றாக இருந்தது. இவைகளில் ஏழு கற்பனைகள், உடைக்கப்பட்ட பொழுது, அவைகள் மரணத்தினால் தண்டிக்கப்பட்டது. கடைசி மூன்று இல்லாமல், களவு செய்யாதிருத்தல் என்பது அவைகளில் ஒன்றாக இருந்தது. எப்படியிருந்தாலும் இதன் அர்த்தம் களவு செய்யாதிருத்தல் என்பது ஒரு பெரிய குற்றமாகக் கருதப்படவில்லை என்பதல்ல.

ஒரு மனிதனுக்குச் சொந்தமல்லாத ஒன்றை எடுக்கிறபோது, மற்றொருவரிடமிருந்து ஏதோ சிலவற்றை எடுக்கிறது என்பதும் களவு செய்தலாகும். இது கொள்ளையிடுதல், திருடுதல், ஏமாற்றுதல், வஞ்சித்தல், மோசம்போக்குதல், பறித்துக்கொள்ளுதல் மற்றும் அதிகப்படியான விலை கூறி விற்றல் என்பதும் களவு செய்தலாயிருந்தது. இது பணம், நிலம் நகைகள், நேரம் மற்றும் ஒருவன் மற்றொருவனிடமிருந்து எதையெல்லாம் எடுக்க அதிகாரமில்லாதிருந்தும் அதை எடுத்தல் அல்லது அதற்காக கிரயம் செலுத்தாமலும், அதாவது ஏமாற்றுதல் மூலம் எடுக்கிறானோ அதுவே களவு செய்தல் ஆகும்.

யோசுவா புத்தகத்தில் யோசுவா இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் பேரை அனுப்பி எவ்வாறு ஆயி பட்டணத்தைத் தோற்கடிக்கலாம் என்று கண்டுவரும்படி செய்ததாக நாம் காண்கிறோம். சாதாரணமாக இஸ்ரவேலர் வெற்றி கொள்வதில் அனுபவசாலிகளாயிருந்திருக்கிறார்கள், ஆனால் இந்த விஷயத்தில் அவர்கள் தோல்வி அடைந்தார்கள். யோசுவா இந்த விஷயத்தைக் கேள்விப்பட்டபோது அவன் மிகவும் கலக்கமடைந்து தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு இதற்கான விடைக்காக கர்த்தருக்கு முன் அழுது கொண்டு கிடந்தான். அதற்குக் கர்த்தர் இஸ்ரவேலர் பாவஞ்செய்தார்கள், நான் அவர்களுக்குக் கட்டளையிட்ட என் உடன்படிக்கையை மீறினார்கள்; சாபத்தீடானதில் எடுத்துக்கொண்டதும், களவுசெய்ததும், வஞ்சித்ததும், தங்கள் பண்டம்பாடிகளுக்குள்ளே வைத்ததும் உண்டே என்றார்.

மேலும் கர்த்தர் சாபத்தீடானதை உங்கள் நடுவிலிருந்து விலக்காதிருக்குமட்டும், நீங்கள் உங்கள் சத்துருக்களுக்கு முன்பாக நிற்கக் கூடாது

என்றார். அடுத்தநாள் யோசுவா அனைத்து ஜனங்களையும் வரவழைத்து, களவு செய்தவனை கண்பிடிக்கும்படி கோத்திரம் கோத்திரமாகவும், குடும்பம் குடும்பமாகவும் குற்றசெய்தவனையும் அவைகளில் அவன் எதை களவு செய்தான் என்பதையும் கண்டுபிடிக்கும்வரை வரவழைத்தான். கடைசியாக, யோசுவா இச்செயலை புரிந்த ஆகானைக் கண்டுபிடித்தான். அவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக பாவஞ்செய்தேன்; இன்னின்ன பிரகாரமாகச் செய்தேன் என்று அறிக்கையிட்டான். பின்பு அப்பொழுது யோசுவா இஸ்ரவேலரெல்லாருங்கூடச் சேராகின் புத்திரனாகிய ஆகானையும், அந்த வெள்ளியையும் சால்வையையும் பொன்பாளத்தையும், அவன் குமாரரையும் குமாரத்திகளையும், அவன் மாடுகளையும் கழுதைகளையும் ஆடுகளையும், அவன் கூடாரத்தையும், அவனுக்குள்ள யாவையும் எடுத்து, ஆகோர்பள்ளத்தாக்குக்குக் கொண்டுபோனார்கள். அங்கே யோசுவா: நீ எங்களைக் கலங்கப்பண்ணினதென்ன? இன்று கர்த்தர் உன்னைக் கலங்கப்பண்ணுவார் என்றான்: அப்பொழுது இஸ்ரவேலரெல்லாரும் அவன்மேல் கல்லெறிந்து, அவைகளை அக்கினியில் சுட்டெரித்து, கற்களினால் மூடி" (யோசு.7:24,25). இப்போது வழக்கத்திற்கு மாறான இந்த திருட்டு, ஆகானும் அவனுடையவர்களும் கல்லெறிந்து, அவனுடைய பயங்கரமான குற்றத்தினிமித்தம் எரிக்கப்பட்டார்கள். ஆகான் தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாக அங்கிருந்த உடமைகளை எடுத்துக் கொண்டதே இஸ்ரவேலர் ஆயி பட்டணத்திற்கு எதிராகச் செல்லுகையில் அவர்கள் தோல்வியடைய காரணமாயிருந்தது. அவர்கள் தங்களுடைய முகாமை விட்டு பாவத்தை அகற்றும்போது மட்டுமே கர்த்தர் இஸ்ரவேலரிடமாகத் திரும்பி அவர்களுடைய பகைவர்களை ஜெயிக்க சித்தமுள்ளவராகவும் உதவிசெய்கிறவருமாகவுமிருந்தார்.

லூக்கா10:25-37-ல் நாம் நல்ல சமாரியனைப் பற்றிய கதையை அறிகிறோம். இயேசு எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போன ஒரு மனிதனைப் பற்றி சொன்னார். அவன் கள்ளர் கையில் அகப்பட்டான்; அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்துகொண்டு, அவனைக் காயப்படுத்தி குற்றுயிராக விட்டுப்போனார்கள். பிறகு அதன் வழியாக வந்த ஆசாரியன் மற்றும் லேவியனும் அவனைக் கண்டு பக்கமாய் விலகிப்போனார்கள். பிறகு ஒரு சமாரியன் அவ்வழியே வந்தான். இந்த சமாரியன் யூதர்களால் எதிரியாகக் கருதப்பட்டவன், ஆனால் இருந்தபோதிலும் அவன் மேல் இரக்கப்பட்டு, அவனுடைய காயங்களைக் கட்டி, அவனைப் பராமரிக்கும்படி சத்திரத்திற்கு எடுத்துச் சென்றான். இயேசுவின் காலத்தில் கள்ளர்கள் இருந்தது சர்வசாதாரணமாகும். -தொடரும்

- ✦ புதிய பள்ளிக்குழந்தைகளுக்காக...
- ✦ நமது புதிய வெளியீடுக்காக...
- ✦ புதிய ஆட்சிளார்களுக்காக...
- ✦ தேவன் கொடுத்த புதிய பெலனுக்காக...
- ✦ இவ்வாண்டில் புதிய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள...
- ✦ புதிதும் ஜீவனுமான மார்க்கத்தைக் கண்டுகொள்ள...
- ✦ புதிய ஆத்துமாக்களுக்காக...

ஜெபியுங்கள்





கர்த்தருடைய சமூகத்தில் செலவிட்டு தேவனை ஆராதிப்பதைத் தவிர்த்து உலகவேலையை நோக்கி ஓடுகின்றனர். கர்த்தருடைய நாளை இவர்கள் கொள்ளையடிக்கின்றனர். சகோதரியே, சற்று சிந்தியுங்கள் "சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம். நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்" (எபி.10:25). இல்லையெனில் கர்த்தருடைய வசனமே நம்மை நியாயந்தீர்க்கும்.

**முதலாவது உயிர்த்தெழுதலை அறிவித்தவர்கள்** (First To Proclaim Resurrection)

கர்த்தருடைய தூதன், "சீக்கிரமாய்ப் போய், அவர் (இயேசு) மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள். அவர் உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார்; அங்கே அவரைக் காண்பீர்கள்; இதோ, உங்களுக்குசொன்னேன் என்றான். அவர்கள் பயத்தோடும் மகா சந்தோஷத்தோடும் கல்லறையை விட்டுச் சீக்கிரமாய்ப் புறப்பட்டு, அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்க ஓடினார்கள்" (மத்.28:7,8). பொதுவாக ஒரு செய்தி வெகு சீக்கிரத்தில் பரவ வேண்டுமென்றால், பெண்களிடம் கூறிவிட்டால் போதும் பல இடங்களுக்கு மின்னல் வேகத்தில் அந்த செய்தி சென்றடைந்து விடும் என்பார்கள். ஸ்திரீகளுக்குள்ளே இந்தகுணம் இருக்கத்தான் செய்கிறது. அதனால் தான் என்னவோ, கர்த்தருடைய தூதன் இயேசு உயிர்த்தெழுந்த செய்தியை ஸ்திரீகளின் மூலம் சீஷர்களுக்கு அனுப்புகிறார். எப்படியோ, இந்த மாபெரும் நற்செய்தியை உண்மையான சந்தோஷத்துடன் மகதலேனா மரியாளும், மற்ற மரியாளும் முதன் முதலாக சீஷர்களுக்கு அறிவித்தார்கள்.

சகோதரியே, நீங்கள் என்னநினைக்கிறீர்கள்? ஸ்திரீகளுக்கு இந்த அதிகாரம் கொடுக்கப்படவில்லை என்கிறீர்களா? வேதவாக்கியங்களை தெளிவாகப் புரிந்துகொள்வோம். உபதேசம்பண்ணவும், புருஷன் மேல் அதிகாரஞ்செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; ...(1தீமோ.2:12) என்று வேதம் கூறுகிறது. வேதவாக்கியத்தின்படி நாம் உபதேசிக்கவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும் அதிகாரத்தைப் பெறவில்லை. ஆனால் மத்.28:7,8-ன்படி கர்த்தருடைய அடக்கம் உயிர்த்தெழுதலின் செய்தியை மற்றவர்களுக்கு அறிவிக்கலாமே. கர்த்தருடைய காரியத்தில், கர்த்தருடைய சபை வளர்ச்சிக்கான காரியத்தில் ஈடுபடுவதில் முதலாவதாக இருப்போம்.

*-K.R.K.Ravi Asir*

**தெரிந்துகொள்வோம்**

- ▶ மரம் ஏறத்தெரியாத குரங்கின் பெயர் பபூன் குரங்கு
- ▶ ஐரோப்பாவில் முதல் யானைப் பந்தயம் நடந்த நகரம் பெர்லின்
- ▶ இந்தியாவில் முதல் ரேடியோ டெலஸ்கோப் நிறுவப்பட்ட இடம் கொடைக்கானல்
- ▶ குட்டி ஜப்பான் என்று அழைக்கப்படுவது தமிழ்நாட்டில் உள்ள சிவகாசி
- ▶ வெளவால் தலை கீழாகத் தொங்கியபடியே தூங்கும்
- ▶ குளிர் காலத்தைவிட கோடை காலத்தில் மனிதர்களுக்கு நினைவாற்றல் அதிகம்
- ▶ வரிக்குதிரைகள் வசிக்கும் நாடு ஆப்பிரிக்கா

மகதலேனா மரியாளிடம் எப்படி அந்த பூரண அன்பு காணப்பட்டது? இயேசு அவளிடமிருந்த ஏழு பிசாசுகளை அவளை விட்டு அகற்றியிருந்தார். பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டபடியினால் அவ்வாறு அன்பு கூர்ந்தாள். பிசாசின் பிடியிலிருந்த அவள் தேவனுடைய பிள்ளையாக மாற்றப்பட்டாள். இது எப்பேர்பட்ட விடுதலை! அன்பு சகோதரியே, உங்களையும் கூட தேவன் தமது குமாரன் மூலமாக பிசாசின் கிரியைகளாகிய பல்வேறு பாவங்களிலிருந்து விடுவித்திருக்கலாம். விடுதலையின் சந்தோஷத்தை அனுபவிக்கின்ற நீங்கள் முடிவுபரியந்தம் இயேசுவின் மேல் அன்புகூர வேண்டியது அவசியமல்லவா? உலகத்தில் அன்புகூராதிருங்கள். உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையாயிருக்கிறது. உலக ஜனங்களுக்கு பயந்து கொண்டு அந்த சீஷர்களைப் போல் உங்களை ஒளித்துக்கொள்ளாதீர்கள். முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான் என்று வேதம் கூறுகிறது.

**முதலாவது கல்லறையினிடத்தில் இருந்தவள்** (First At The Tomb)

இயேசு அடக்கம்பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் அதாவது வாரத்தின் முதல்நாளில் சுகந்தவர்க்கமிடும்படி கல்லறையினிடத்திற்கு மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் வந்தார்கள். ஆனால் “வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே இயேசு எழுந்திருந்தபின்பு, மகதலேனா மரியாளுக்கு முதல் முதல் தரிசனமானார்” (மாற்.16:9). மற்ற ஒருவரும் முதல் முதல் இயேசுவை தரிசிக்காமல் மகதலேனா மரியாள் மட்டும் தரிசிக்கும் பாக்கியம் பெற்றதற்குக் காரணமென்ன? கல்லறையில் இயேசுவைக் காணவில்லை என்ற செய்தி அறிந்து, மற்ற சீஷர்களும் ஸ்திரீகளும் கல்லறையினிடத்திற்கு வந்து பார்த்து விட்டு மீண்டும் தங்கள் இடத்திற்குத் திரும்பிப் போய்விட்டார்கள் (யோவா.20:1-10). ஆனால் மகதலேனா மரியாளோ கல்லறையினருகே வெளியே நின்று அழுதுகொண்டிருந்தாள். இயேசுவின் மேல் அவள் கொண்டிருந்த அன்பினால் அவள் கல்லறையை விட்டு அகலாதிருந்தாள். அதனால் இயேசுவை முதல் முதல் தரிசிக்கும் பாக்கியம் பெற்றாள். அன்பு சகோதரியே, கர்த்தருடைய நாளிலே கர்த்தருக்கு சுகந்தவர்க்கமிட வந்தவள் கர்த்தரை தரிசித்தாள். நீங்கள் கர்த்தருடைய நாளிலே எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள்? சபையாகக் கூடி தேவனை ஆராதிக்கவா அல்லது இப்பிரபஞ்சத்தின் தேவைவனைப் பிரியப்படுத்தவா? சிந்தியுங்கள். இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் உலக சம்பத்தைக் காட்டி தன்னைப் பணிந்து கொள்ளும்படி தந்திரமாக செயல்படுவான் உங்களுடைய உலகப்பிரகாரமான தேவைகள், மற்றும் விருப்பங்களை அறிந்தவனாய் உங்களை மோசம்போக்கும்படி சுற்றித்திரிகிறான். இயேசுவையே வஞ்சிக்கத் திட்டமிட்டவன் உங்களை விட்டுவிடுவானா? மத்தேயு4:10,11-ல் இயேசுவைப் பார்த்து நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத்தருவேன் என்று சொன்னான். அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்” வேதவசனத்தினால் அவனை ஜெயித்தார். பிசாசு கிறிஸ்தவர்களையே குறிவைத்துள்ளான். ஞாயிற்றுக் கிழமை தான் சகல வைபவங்களும், தேர்வுகளும் நடைபெறுகின்றன. என்னசெய்வது எனக்கு வேலைகிடைக்காமல் கஷ்டப்படுகிறேனே என்று சொல்லி வாரத்தின் முதல் நாளை



## சந்தோஷத்திற்கான சாவி
## The Key To Happiness

-Jerry




அநேகமாக ஒவ்வொரு கலாச்சாரத்திலும் ஒவ்வொருவரும் தேடுகின்ற மனநிலையே சந்தோஷமானதுதான். நான் கண்டறிந்திருக்கிறதான ஒவ்வொரு ஆய்விலும் அதிகமாக மக்களின் முக்கிய நோக்கம் சாதாரணமாக மகிழ்ச்சியுடன் இருப்பதே ஆகும். இருந்தபோதிலும், ஒவ்வொருவரும் மகிழ்ச்சியுடன் இருக்கவே விரும்புகின்றனர். உறவு முறையில் சிலர் இந்த இலக்கை உண்மையாக அடைகிறவர்கள் சிலர் என்பதைக் காண்பிக்கிறது. ஆம், அநேகர் சந்தோஷமான நேரத்தை பெற்று, அநேகவற்றை அடைந்து, தற்காலிக சந்தோஷத்தை அடைந்து வெளிப்பிரகாரமாக மிக ஆசீர்வாதத்தை அடைய விரும்புகின்றனர். இருந்தபோதிலும் உள்ளான மனதில் அதிருப்தியில், நம்பிக்கையற்ற நிலையில் அல்லது நிலையற்ற தன்மையில் நிறைந்துள்ளனர். உலகம் எண்ணற்ற சந்தோஷமற்ற ஜனங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொருவரும் ஏன் இப்படிப்பட்ட சந்தோஷத்தைக் தேடுகின்றனர்?

பதில் மிக எளிதானது. மக்கள் சந்தோஷத்தை கெட்ட இடங்களில் அல்லது தீய வழிகளில் தேடுகின்றனர். நம்மில் அநேகர் சந்தோஷத்தை உலக செல்வத்தில் காணமுடியும் என நினைக்கிறோம். எப்படியும், உலக செல்வம் நிலையான சந்தோஷத்தை கொண்டுவராது. பணக்கார மற்றும் புகழ்பெற்றவர்களின் வாழ்க்கைகளைப் பாருங்கள். அவர்கள் எல்லாவற்றையும் கொண்டவர்களாக காணப்படுவார்கள் - புகழ், அதிர்ஷ்டம். அவர்கள் கற்பனை செய்யமுடியாத மிக ஆடம்பர சூழல்களில், அதாவது விலையுயர்ந்த வஸ்திரங்களை உடுத்துகிறார்கள், மேலும் வீணாக செலவுசெய்கிற விருந்துகளில் களிக்கிறார்கள். வாழ்க்கை அவர்களுக்கு நல்லதைப் போல காணப்படுகிறது. ஆயினும், வெளிப்படையாக அவர்கள் பேசும்போது அவர்கள் தங்களுடைய வாழ்க்கைகள் இவ்வாறு காணப்படுகிறதைப் போல் அல்ல என்று சொல்ல இடமளிக்கின்றனர். மன அழுத்தத்தோடு மது அருந்துவதோடு, பிறர்கண்ணில் படாத நிலையை விரும்புவதோடு, திருமண பிரச்சனைகள், குழந்தையை வளர்க்கும் பிரச்சனைகள் போன்ற பலவற்றோடு அவர்களுடைய போராட்டங்களை வாசிக்கிறோம். அவர்கள் அடிக்கடி ஒரு பிரச்சனையிலிருந்து இன்னொரு பிரச்சனைக்குள்ளாவதை சாதாரணமாகக் காணமுடிகிறது. நிச்சயமாக இது சந்தோஷத்திற்கான சாவியல்ல.

இப்படிப்பட்ட கட்டுபாடில்லாத வாழ்க்கை முறை சந்தோஷத்தில் தேவையற்ற விளைவைக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் ஒத்துக்கொள்வீர்கள், ஆனால் நிச்சயமாக சாராசரிக்கு மேலான வருமானமும் வாழ்க்கை முறையும் இலக்கை அடையலாம். பல வருடங்களாக ஒரு மனிதன் போதுமான வசதியாக வாழ்வதற்குரிய செல்வத்தை உடையவனாயிருக்கிறான், எனவே அவனால் வாழ்வை அனுபவிக்கவும் சந்தோஷமாக இருக்கவும் முடிகிறது. ஒருவன் கிட்டதட்ட ஒருபோதும் "போதும்" என்றிருப்பதில்லை என்பதே பிரச்சனையாயிருக்கிறது. அவனுடைய வருமானம் கூடுகையில் அவனுடைய

தேவைகளும், விருப்பங்களும் கூடுகிறது. ஒருவனுடைய வருமானம் அதிகமோ அல்லது குறைவோ அவன் தெரிந்து கொண்ட தேவையான வருமான அளவு அவன் சம்பாதித்துக் கொண்டிருந்த வருமானத்தைக் கொண்டு வசதியான வாழ்க்கை முறையை இரட்டிப்பாக வாழ்ந்து கொண்டிருந்தான் என கருதவில்லை என்று ஒரு ஆய்வு முடிவுசெய்கிறது! இப்படியாக உள்ளான மனத்திருப்தி மற்றும் சந்தோஷம் நாம் புரிந்துகொள்வதைக் காட்டிலும் எப்போதும் நியாயமானதாகத் தோன்றும்.

யோவான் 13-ல் இயேசு நமக்கு நிலையான சந்தோஷத்திற்கான சாவியைக் கொடுக்கிறார்; எப்படியென்றால், இது மனிதன் பார்ப்பதிலிருந்து முழுவதும் வேறுபட்டிருக்கிறது. நாம் அழைக்கிறதான "பஸ்கா பண்டிகையின்" போது, இயேசு தமது நினைவு விருந்தினை ஸ்தாபிக்கும் போது, வெளிப்படையாக தம்முடைய சீஷர்களிடம் தாம் சீக்கிரமாக மரிக்கப் போகிறேன் என்று சொன்னார். உண்மையாகவே, இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் அவர் மரிப்பார் இப்படியாக பந்தியிலிருக்கும் போது, நினைத்து பார்க்காததை இயேசு செய்தார். அவர் வஸ்திரங்களை கழற்றிவைத்து, ஒரு சீலையை எடுத்து அரையிலே கட்டிக்கொண்டு, சீஷருடைய கால்களைக் கழுவினார். அந்த நாட்களில், ஜனங்கள் சந்தன மரத்தாலான செருப்புகளை அணிந்தார்கள். அவர்களுடைய பாதங்கள் அழுக்கான பாதைகளில் அவர்கள் நடக்கையில் அழுக்காக மாறும். இப்படியாக ஒரு விருந்தளிப்பவரும் விருந்தாளிகளுடைய பாதங்களை கழுவி விடுவார், இது மிகவும் தன்னை தாழ்த்துகிற செயல். விருந்தளிப்பவர் அடிமைகளைக் கொண்டபோதுமான வசதிபடைத்தவராக இருப்பாரென்றால், இச்செயல் ஒரு அடிமையினால் செய்யப்பட்டது. இக்காரியத்தில், அங்கே விருந்தளிப்பவர் இல்லை, சீஷர்களில் ஒருவர் கூட பாதங்களைக் கழுவும்படி தங்களைத் தாழ்த்த முன்வரவில்லை. அதன் விளைவு அந்த அறையே பெருமையுள்ள இருதயங்களாலும் அழுக்கான கால்களாலும் நிறைந்திருந்தது. இயேசு பிறகு எழுந்து அவர்கள் பின்பற்றும்படி மாதிரியைக் கற்றுக்கொடுத்தார். இராஜாதி இராஜா இந்த தாழ்மையான செயலை செய்து நிறைவேற்றினார். 21-ம் நூற்றாண்டில் மற்றவர்களுக்கு சேவை செய்யும்படி சமநிலையில் உள்ளவர்களாயிருக்கும்படி விரும்புகின்றனர் - அவர்கள் யாராயிருந்தாலும் பராவாயில்லை, எவ்வளவு விலையானாலும் பரவாயில்லை, இந்தச் செயல் எவ்வளவு சந்தோஷமற்ற செயல்.

சந்தோஷத்திற்கான சாவி யோவான் 13:17-ல் காணப்படுகிறது. "நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்". பாக்கியவான்கள் என்பதற்கு கிரேக்க மொழியில் கஷ்டம் என சரியாக ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. சந்தோஷம் என்பதன் அர்த்தத்திற்கு மிக நெருக்கமான வார்த்தை உள்ளான சந்தோஷம், இது வெளிப்படையான சூழலைச் சார்ந்துள்ளது அல்ல என விவரிக்கப்பட்டுள்ளது. இயேசு மெய்யான சந்தோஷம் அடுத்தவர்களுக்கு சேவை செய்வதில் மட்டுமே காண முடியும் என நமக்கு சொல்லிக் கொண்டிருக்கிறார். இது நமக்கு உணர்வைக் கொடுக்கிறதில்லை. நாம் ஒரு வேலைக்காரனாக இருப்பதிலிருந்து சந்தோஷத்தைப் பெறமுடியும் என நினைப்பதில்லை. இதற்கு எதிர்மறையானது அதிகமதிகமான உணர்வை நமக்குக் கொடுக்கிறது. ஆனால் அப்படியல்ல, தேவசித்தத்தின்படியே. இயேசுவும் கூட, "உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்" (மத்.23:11) என்றார்.



## விசேஷித்த மேன்மை
## *Special Distinction*

பெண்கள் பகுதி

-Glory Arjunan



இன்றைய நாளில் பெண்கள் இப்பூமியிலும், விண்வெளியிலும் எத்தனை எத்தனையோ சாதனைகளைப் படைத்து மண்ணுக்கும் மகிமையைக் கொண்டு வருகின்றனர். சில ஆண்டுகளுக்கு முன் சுனிதா வில்லியம்ஸின் விண்வெளி சாதனை பூமியை வியக்கப்பண்ணினது. பெண்களாகிய நம்மெல்லோருக்கும் இது பெருமையை மாத்திரமல்ல எதையும் சவாலாக்கிக் கொள்ளும் ஊக்கத்தையும் அளிக்கிறது. இருந்தபோதிலும் அப்போஸ்தலனாகிய பேதுரு, "கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்... அவருடைய வாக்குத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்" (2பேது.3:10,13) என்று எழுதியிருக்கிறதை வாசிக்கும்போது எல்லாம் மாயை என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது. ஆம், எல்லாம் மாயை! "சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற காரியங்களையெல்லாம் கவனித்துப் பார்த்தேன்; இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது" (பிர.1:14) என்கிறார் ஞானி சாலொமோன். இப்படியிருக்க அழிந்துபோகாத ஆவிக்குரிய காரியங்களைச் (Spiritual Matters) சிந்தித்து, அதைப் பற்றிக்கொண்டு, நீதிவாசமாயிருக்கும் புதிய இடத்திற்குச் செல்ல நம்மை ஆயத்தப்படுத்தும் முயற்சியில் ஈடுபடுவோம். இம்முயற்சிக்கு உதவியாக வேதாகமத்தில் விசேஷித்த இடத்தினைப் பிடித்துள்ள சில பெண்களை நமக்கு மாதிரியாகக் கொள்வோம்.

**சிலுவையின் கடைசிபரியந்தமும் (Last At the Cross) இருந்தவர்கள்:** இயேசுவின் சிலுவைப் பயணத்தில் கடைசிமட்டும் இயேசுவோடு இருந்தவர்கள் மகதலேனா மரியாளும் யோசேயின் (இயேசுவின் தாய்) தாயாகிய மரியாளும்தான். இயேசுவோடு உண்டு உறங்கி ஊழியஞ்செய்த இயேசுவின் சீஷர்களெல்லாரும் ஓடிவிட்டனர். ஆனால் தேவனுடைய ராஜ்யம் வரக் காத்திருந்தவனாகிய யோசேப்பு என்பவன் ஒரு கனம்பொருந்திய ஆலோசனைக்காரன், இவன் வந்து இயேசுவின் சரீரத்தைப் பெற்று, மெல்லி துப்பட்டியை வாங்கிக் கொண்டு வந்து, மரித்த இயேசுவை சிலுவையிலிருந்து இறக்கி, அந்தத் துப்பட்டியிலே சுற்றி, கன்மலையில் வெட்டியிருந்த கல்லறையிலே அவரை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு கல்லைப் புரட்டிவைத்து இவ்விதமாக அடக்கம்பண்ணினான். "அவரை வைத்த இடத்தை மகதலேனா மரியாளும் யோசேயின் தாயாகிய மரியாளும் பார்த்தார்கள்" (மாற்.15:47). அப்படியானால் இந்த ஸ்திரீகள் கல்லறைவரைக்கும் சென்றிருக்கிறார்கள். ஆனால் சீஷர்களோ பயந்து தங்களை ஒளித்துக்கொண்டார்கள். "பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்" இயேசுவின்மேல் முழுமையான அன்பு கொண்டிருந்ததால் அந்த இரு ஸ்திரீகளும் கல்லறை வரை சென்றார்கள். ஒருவேளை இயேசுவின் தாய் என்பதால் இயற்கையான தாய்அன்பு மரியாளிடம் காணப்பட்டது என்று சொல்லலாம். ஆனால்

## நமது நண்பர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தல்

Evangelizing Our Friends -TVOTI



**அன்பு உங்கள் நண்பர்களுடன் நடைமுறைப்படுத்தப்படவேண்டும்**

**பிரிவு 1, பாடம் -8**

Love Must Be Practiced with Your Friends

**– சென்ற மாதஇதழின் தொடர்ச்சி**

"நான் உன்னை நேசிக்கிறேன்" என்று நாம் கூறுவது அவசியம் ஏனென்றால் மற்றவர்கள் தாங்கள் அன்புகூரப்படவேண்டும் என்றும் விரும்புகிறார்கள்! மேலே குறிப்பிடப்பட்டுள்ளபடி நாமனைவரும் அன்புகூரவும், அன்புகூரப்படவும், சிருஷ்டிக்கப்பட்டோம் (ஆதி.1:27; மத்.22:37-40). சிலவேளைகளில் மற்றவர்கள் அழுத்தமான வெறுப்புணர்ச்சியைத் தூண்டக்கூடிய வழிகளில் நடந்துகொள்வதை நாம் காண்கிறோம். இது இவ்வேளைகளில் அவர்களை நாம் அதிகம் நேசிக்க வேண்டுமென விரும்புகிறார்கள் என்பதாக இருக்கிறது. தேவன் அவர்களை நேசிக்க வேண்டுமென விரும்பும்வண்ணம் அவர்கள் நேசிக்கப்படவில்லை என இப்பேர்பட்ட தனிநபர்கள் சத்தமிட்டு அழுது தெளிவுப்படுத்துகின்றார்கள். அவர்களிடம் நட்பாக இருப்பதன் மூலமும் தேவன் நேசிப்பது போல் அவர்களை நேசிப்பதின் மூலமும் அவர்களது வாழ்வை என்றென்றும் சிறப்பானதாயிருக்கும்படி நீங்கள் மாற்றலாம். அவர்கள் தேவையில் இருக்கிறபோது அவர்களுக்கு உதவி செய்யவும் மேலும் நல்ல நேரங்களிலும் கஷ்டநேரங்களிலும் தேவனுடைய அன்பை காண்பிக்கவும் ஆயத்தமாக இருங்கள். மற்றவர்களோடு நமக்குப் பிரச்சனைகள் இருக்கும்போதும் கூட நம்முடைய முழு எண்ணமும் மற்றவர்களை நேசிக்கக் கூடாது என்று சொல்வதாகத் தோன்றினாலும் கூட அவ்விதமான சோதனையை எதிர்த்து எவ்வழியிலும் அவர்களை நேசிக்க வேண்டும் இதை நீ செய்யும்போது மகிழ்ச்சியடைவாய்! நிச்சயமாக ஒவ்வொருவரும் நமது அன்பை ஏற்கவோ அல்லது மறுக்கவோ செய்யும் வாய்ப்பினைப் பெற்றுள்ளனர் மேலும் நாம் ஒரு வழியிலோ மறுவழியிலோ அவர்களை நேசிக்க ஆயத்தமுள்ளவர்களாயிருக்க வேண்டும். ஜனங்கள் அன்புகூரப்பட விரும்பாதவர்களாக இருக்க மாட்டார்கள். அவர்களை நீங்கள் நேசிக்க ஆயத்தமா?

"நான் உன்னை நேசிக்கிறேன்" என்று கூறவேண்டியது அவசியம் ஏனென்றால் தேவனுடைய அன்பைப் பிரசித்தப்படுத்த மற்றவர்களைப் பார்த்து நான் உங்களை நேசிக்கிறேன் என்று கூறுவதைத் தவிர வேறு என்ன இருக்கிறது? நாம் நம்முடைய உண்மையான அன்பைக் காண்பிக்கையில் ஒரு நபருடைய வாழ்க்கையில் ஏற்படும் மாற்றத்தின் நிலை மிகப்பெரிய வியப்பாயுள்ளது இச்செயல் தேவனுடைய அன்பை கிறிஸ்துவின் மூலம் அவர்களோடு பகிர்ந்துகொள்ள நமக்கு ஓர் வாய்ப்பினைக் கொடுக்கிறது. இச்சம்பவமே அவர்கள் அறிந்து கொள்வதற்கும் பின்பு அவர்கள் தேவனுடைய வார்த்தையைக் கைக்கொள்ள அவர்கள் தேடும் வண்ணமாக அவர்களுடைய இருதயங்களில் மாற்றத்தைக் கொண்டுவர தேவன் கிரியை செய்வார். அன்பு வியப்பும் வலைமையுமுள்ளது. ஒவ்வொரு நாளும் உங்களுடைய நண்பர்களிடம் அன்புகூருவதை அப்பியாசப்படுத்துங்கள். பின்பு அவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவியுங்கள் அதன்பின் நீங்கள்தேடுகின்றபோது ஒன்றும் தேவனுடைய அன்பை விட்டு உங்களை ஒருபோதும் பிரிக்காது என்பதை எப்போதும் நினைவு கூருங்கள் (ரோம.8:31-39).

**தொடர்புடைய இவ்வேத வாக்கியங்களைப் படித்து விவாதியுங்கள்:**

நீதி.17:17, மத்.22:37-40, யோவா.15:13, ரோம.5:5-8; 8:31-39, கலாத்.5:22-23, 1யோவா.4:8,16.



நாம் எவ்வாறு இந்த மனநிலையைப் பெற முடியும்? அன்பு ஒன்றே உந்து சக்தியாகும். எவ்வித காரணமுமின்றி நாம் செய்வோம் என அன்பில்லாமல் நாம் காரியங்களைச் செய்ய முடியும். யோவான் 13:1-ல் இயேசு தம்முடைய சீஷர்களை கடைசி வரை நேசித்தார். அவருடைய அன்பு அளவற்றதாக இருந்தது என்பதை நாம் காண்கிறோம். மேலும், யோவான் 13;3-ஐ கவனியுங்கள் இந்த சுருக்கத்தில், இயேசு இம்மனநிலையைப் பெற மூன்று காரியங்களைக் கொண்டிருக்கும்படி அனுமதித்தார் என்பதை நாம் கூறலாம். **அவர் தாம் யார் என்பதை அறிந்திருந்தார். அவர் தேவனுடைய குமாரன் என்பதை அறிந்திருந்தார். அவர் எங்கிருந்து வந்தார் என்பதை அறிந்திருந்தார். அவர் தாமே பரலோகத்தின் மகிமைகளை விட்டு விட்டார் என்பதை அறிந்திருந்தார்.** மேலும் அவர் எங்கே செல்லுகின்றார் **என்பதையும் அறிந்திருந்தார்.** அவர் மறுபடியும் பிதாவோடு கூட என்றென்றும் வாழும்படிக்குச் சென்று கொண்டிருந்தார். கிறிஸ்தவர்களாகிய நாம் இந்த மூன்று காரியங்களை அறிந்திருக்கிறோம். நாம் ஒரு சமயம் பாவத்தில் அழிந்தவர்களாயிருந்தோம் என்பதை அறிவோம். இப்போது நாம் தேவனுடைய புத்திர சுவிகாரர்களாக ஆகிவிட்டோம் என்பதை அறிவோம். மேலும் நாம் தேவனுடைய வாரிசாக அவரோடுகூட இணைந்திருக்கப்போகிறோம் என்பதையும் அறிவோம். இது நம்மை மிகவும் பலமுள்ள ஜனங்களாக இந்த பூமியில் உருவாக்கும். மற்றவர்களுக்கு சேவை செய்யும்படி மாத்திரமே தனித்தனியாக மிகவும் பலமுள்ளவர்களாயிருக்கும்படி நம்மை தகுதிப்படுத்தும்.

சந்தோஷத்திற்கான சாவி இதுவென்று மற்றவர்களும் கூட உணருகிறவர்களாயிருப்பார்கள். ஆல்பர்ட் ஸ்வர்ட்ஷர் ஒரு உலக புகழ்பெற்ற பாடகரும் தத்துவஞானியுமாவார். தனது 30 வது வயதில் மருத்துவ கல்லூரியில் நுழைந்தார். பட்டம் பெற்றபின், அவர் கேபன், ஆப்பிரிக்காவுக்குப் பயணம் செய்து தனது வாழ்வில் மீதமுள்ள நாட்களை அதிகமாக மருத்துவத்தேவையிலிருக்கும் ஜனங்களுக்கென்று செலவு செய்து சேவைசெய்தார். அவர் 1952-ம் ஆண்டு நோபல் பரிசு பெற்று அவர் பெற்ற பணத்தை ஆப்பிரிக்காவிலுள்ள தனது மருத்தவமனையை விரிவுபடுத்த பயன்படுத்தினார். சந்தேகமில்லாமல், அவர் தியாகம் செய்து, ஆப்பிரிக்கக் காடுகளில் பல கஷ்டங்களை சந்தித்து, கடினமான வாழ்வு வாழ்ந்தார். அவர் தனது வாழ்வு முடியப்போகும் சமயத்தில் கூறிய கூற்று: "உங்களுடைய விதி எப்படியிருக்கும் என எனக்குத்தெரியாது, ஆனால் ஒன்றை நான் அறிவேன்; உங்களில் எவன் ஒருவன் சேவை செய்யும் வழியைத்தேடி கண்டுபிடிப்பானோ அவனே உண்மையான சந்தோஷமுடையவனாயிருப்பான்" என்றார்.

இன்று உண்மையிலேயே நீங்கள் சந்தோஷமாயிருக்கிறீர்களா? தாழ்மையான சேவையில் அந்த சாவி கண்டுபிடிக்கப்படுகிறது. அதற்கும் மேலாக, இந்த சாவி ஒவ்வொருவருக்கும் உபயோகப்படுத்தக்கூடியது. நீங்கள் பணக்காரரோ அல்லது ஏழையோ, படித்தவரோ அல்லது படிக்காதவரோ, எந்த நாட்டவரோ என்பது முக்கியமல்ல. சந்தோஷம் தேவனுக்கும் மற்றவர்களுக்கும் அன்பினிமித்தம் விருப்பத்துடன் சேவை செய்வதினால் வருகிறது. ஒவ்வொருவரும் விரும்புகின்ற ஒரு வேலைக்காரனாக வாழும் போது நீங்கள் உள்ளான சமாதானத்தையும், சந்தோஷத்தையும், மனதிருப்தியையும் கண்டு கொள்ளுவீர்கள். எனவே இது வல்லமையுடைய தேவனின் வாக்குத்தத்தம். இதை நீங்கள் நம்புவீர்களா?

பெண்கள் பகுதி




## இயேசு கிறிஸ்து, ஒரே நித்திய பலி
### Jesus Christ, the Eternal Sacrifice -Betty

- சென்ற மாத இதழின் தொடர்ச்சி

**VII. மீட்பின் கிரியை**

1. அவர் ஆவியில் அமைதியுள்ளவராய் பரியாசக்காரருடைய பரிகாசத்திற்கும் சிலுவை மரணத்திற்கும் ஒப்புவித்தார் (மத்.26:63,64).

2. "என் தேவனே, என் தேவனே..." (மத்.27:46)

❑ பாவஞ்செய்வதன் மூலம் நாம் பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தக் கூடாது என எச்சரிக்கப்படுகிறோம் (எபே.4:30); ஆவியை அவித்துப் போடாதிருங்கள் (1தெச.5:19); அதிகமதிகமாகப் பாவஞ்செய்யும் வேளையில் பரிசுத்த ஆவியானவர் நம்மை விட்டு விலகி விடுவார் (எபி.10:25-29).

❑ அவர் ஒருவரே மனுஷகுமாரனாக மனுஷனுடைய பாவங்களுக்காக மரித்தார்.

**VIII. என்னுடைய இரட்சிப்பிற்கான கிரயம் என்ன? சரீர மரணம் மாத்திரம் போதுமானதா?**

1. சரீரப்பிரகாரமானது ஆவிக்குரியவற்றிற்கு கிரயம் செலுத்த முடியுமா?

❑ நாம் நம்மை ஜீவபலியாக அவருக்குக் கொடுக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் - ஒரு அடையாளமாக அல்ல

❑ கிறிஸ்துவுக்கு, கடனாகக் கொடுக்கப்பட்ட சரீரத்தில் 33 வருடங்கள் என்ன நடந்தது, மேலும் அந்த சரீரத்திலிருந்து விடுவிக்கப்பட்ட போது என்ன நடந்தது?

2. அவர் உண்மையாகவே நம்முடைய பாவங்களை எடுத்துப்போட்டார்; மரணம் கட்டுப்படுத்தப்பட்ட ஒரு காரணி (தேவனுடைய குமாரனாக மாறியிருப்பதில் அவருக்குள்ளான ஞானஸ்நானம் நமக்கு நிர்ணயிக்கப்பட்ட காரணியாயிருக்கிறது). நியமிக்கப்பட்ட அந்த நாளில் அவர் பின்வாங்க இயலவில்லை; நம்முடைய பாவங்களுக்கென்று செலுத்த வேண்டிய கிரயம் என்னவோ, அந்த கிரயத்தை செலுத்த அவர் ஒப்புக்கொடுக்கப்பட்டார்.

3. எவ்வாறு கிரயம் செலுத்தப்பட்டது? 1தீமோ.3:16 இது அவருடைய ஆவிக்குரிய கணக்கிலிருந்து வந்தது, மாம்சத்திலிருந்து அல்ல எனக் காட்டுகிறது.

"தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார்"

நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்தார் - எபி.9:14

**XI. மரணத்திற்குப்பின் - மாற்றங்களை நாம் காண்கிறோம்.**

1. உயிரோடு எழுப்பப்பட்டது அவருடைய மனித சரீரம்

❑ அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர் (கொலோ.1:18).

❑ ரோமர் 6ல் சொல்லப்பட்டுள்ளபடி, கிறிஸ்துவின் மாம்ச சரீரம் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல நம்முடைய சரீரங்களும் அதே ஆவியினாலே எழுப்பப்படும் என்று நம்பிக்கையுடையவர்களாக இருக்கிறோம்.

2. அவர் உயர்த்தப்பட்டார் - மத்.28:18; அப்.1:9 அத்துடன் தானியேல் 7:13,14; பிலிப்.2:9-11 உயிர்வினைப் பெறுதல்

"ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி... எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்"

3. அவர் வானத்தையும் பூமியையும் கர்த்தாதி கர்த்தாவாகவும் ராஜாதி ராஜாவாகவும் ஆளுகை செய்கிறார்.

4. பிதாவாகிய தேவனைத் தவிர சகலமும் அவருக்குக் கீழ்ப்படுத்தப்பட்டது (1கொரி.15:27).

**X. அவர் நித்திய குமாரன்**



1. நியாயத்தீர்ப்புக்குப் பின்பு, தேவத்துவத்திற்குள் தம்முடைய உண்மையான உறவுமுறைக்குத் திரும்பிச் செல்லுவாரா? நம்முடைய பாவங்களுக்கான தியாக பலி எத்தகைய நிரந்தரமானதாயிருக்கிறது?

2. அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் குமாரனாக ஆளுகை செய்கிறார். நமக்காக மத்தியஸ்தராக இருக்கிற அவர் குமாரனாக இருக்கிறார் (1தீமோ.2:5).

3. நம்முடைய சொந்த உயிர்த்தெழுதலில் அவரைப் போலவே இருப்போம் என நாம் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறோம் - நாம் தேவனைப் போலிருப்போம் என ஒருபோதும் வாக்குப்பண்ணப்படவில்லை. "நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.... அவர் நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" (பிலி.3:20,21) 1யோவா.3:2; ரோம.8:11; 1கொரி.15:49ம் வசனங்களிலும் கூட இவ்விதமாக எழுதப்பட்டுள்ளது.

4. அவர் எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும்வரைக்கும் அவர் ஆளுகை செய்யவேண்டியது, அதன் பின்பு அவர் தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார், அது புதிதாக தேவனுக்குக் ஒப்புக்கொடுக்கப்பட்டதாயிருக்கும் (1கொரி.15:24-28).

5. நாம் கிறிஸ்து மூலமாய் தேவனுடைய சுதந்தரராயிருப்போம் என நமக்கு வாக்குத்தத்தமானது ஏற்படுத்தப்பட்டுள்ளது (கலா.4:7). கிறிஸ்து வார்த்தையாக இருக்கவில்லை அவருடைய உறவுமுறையானது மாற்றப்பட்டிருக்கிறது. இது (தேவனோடுள்ள அவருடைய குமாரனுக்குரிய உறவு) நாம் புத்திரராயிருக்கிறபடியினால் "அப்பா, பிதாவே!" என கூப்பிடுகிற கிறிஸ்துவின் ஆவியை நம்முடைய இருதயங்களில் உணரமுடிகிறது. இவருடைய குமாரனுக்கான உறவுமுறையின் பாலம் எடுத்துப் போடப்படுமானால் நாம் தேவனிடத்திற்குக் கடந்து செல்ல நமக்கு ஒரு வழியும் கிடையாது.

6. தேவன் ஒரேபேறான குமாரனை என்றென்றைக்கும் பூரணரானவராக ஏற்படுத்தியிருக்கிறார் (எபி.7:28) - இது குமாரனுடைய நித்திய காலமாகும்.

7. நாம் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாயிருப்போம் (ரோம.8:17). "...பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; - தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே"

8. நாம் கிறிஸ்துவோடே அவருடைய சிங்காசனத்தில் உட்காருவோம் (வெளி.3:21)

**முடிவுரை:**

பகிர்ந்தளிக்கும் பூமியிலிருந்து அவர் மீட்டிருக்கிற அவருடைய சகோதரர்களாகிய நாம் கிறிஸ்து கொண்டுள்ள நித்திய மகிமை மற்றும் சுதந்தரம் எல்லாவற்றையும் பெறும்படி வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ளோம். மகிமைக்கென்று அநேகக் குமாரர்களுக்கு அவர் கொண்டுவருகிற இடத்தில் கிறிஸ்துவுடனே கூட தொடர்ச்சியான இது சகோதரத்துவத்தின் நித்திய சித்திரத்தில் ஒன்றாகயிருக்கிறது.

இதுவே நமது இரட்சிப்பிற்கான கிரயமாயிருக்கிறது - இதுஅவருடைய சகோதரத்துவத்தோடு ஒருமித்தவர்களாயிருப்பதற்கு தேவத்துவத்தின் சமத்துவத்திலிருந்து வந்த ஓர் நித்திய மாற்றமாயிருக்கிறது

**கிறிஸ்துவாகிய "வார்த்தையின்" தொடர் வாழ்வின் ஐந்து வேறுபட்ட காலங்கள்**

| சிருஷ்டிகர் | மத்தியஸ்தர் | | சகோதரர் | இரட்சகர் / மத்தியஸ்தர் | வாரிசுக்கு உரிமையாளர் |
|---|---|---|---|---|---|
| ஆரம்பம்<br>யோவான்1:1<br>எபிரயெர் 1:3<br>பிலிப்பியர் 2:6 | பழையஏற்பாடு<br>கொலோ.1:16<br>1பேது.1:11<br>யாத்.3;<br>யோசு.5:13-15 | பிறப்பு | புதியஏற்பாடு<br>பிலி.2:5-7<br>எபி.1:5<br>எபிரயெர் 2:14-17<br>யோவா.1:14 | இப்போது<br>கொலோ.1:18<br>மத்.28:18<br>தானி.7:13,14<br>வெளி.17:14 | நித்திய நித்தியமாக<br>1தீமோ.2:5<br>பிலி.3:20,21<br>ரோம.8:17<br>வெளி.3:21 |